**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)-ன்**
**செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர்:திருமதி.மு.கோகிலா.பி.இ.,**

ந.க.எண்.6683/2022/அ6 நாள்.08.07.2024

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் - கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு - கோயம்புத்தூர் வடக்கு வட்டம் - கிராம நிருவாக அலுவலர் மருதகிரி(திரு) என்பவர் 08.06.2022 அன்று பணியிடையில் காலமானது - அவரது மனைவி ஷெம்நாஸ்(திருமதி) என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது - பணியேற்ற நாளான 26.12.2022முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல்

படிக்கப்பட்டவை :

1. ஷெம்நாஸ்(திருமதி) என்பவரின் மனு நாள்:07.10.2022
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள் 115/2022/அ7 நாள்: 20.12.2022
3. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1)துறை, நாள்:08.03.2023
4. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை அவர்களின் கடித எண்.ஆ.கு.3/4600/2024, நாள்.20.02.2024 மற்றும் 28.02.2024.

*****

**ஆணை:**

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கிராம நிருவாக அலுவலராகப் பணிபுரிந்து பணியிடையே கடந்த 08.06.2022 அன்று திரு.மருதகிரி என்பவர் காலமானதைத் தொடர்ந்து, அவருடைய மனைவி திருமதி.ஷெம்நாஸ் என்பவருக்கு பார்வை 2ல் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 26.12.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 3, 4இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் கடிதங்களின்படி, தனியர் பணியில் இணைந்த நாளான 26.12.2022 முற்பகல் முதல் தனியரின் பணி வரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்காண் ஆணை விவரம் குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கோயம்புத்தூர்.

**பெறுநர்:**
திருமதி.ஷெம்நாஸ்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்.

**நகல்:**
அ7 இருக்கைக்கு

8/7/24